2. உரிமை மீறல் பிரச்சினை

எதிர்க்கட்சித் தலைவர் அறை பறிக்கப்பட்டதாகப் பேட்டியளித்து, பேரவைத் தலைவருக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் தே.மு.தி.க. உறுப்பினர்கள் கடிதம் கொடுத்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை, சட்டமன்றப் பேரவைச் செயலகம், சட்டமன்றப் பேரவை வளாகம், அதிலுள்ள அறைகள் இவை அனைத்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட இடங்கள் ஆகும். இந்த இடங்களில் எந்தெந்தப் பகுதிகளில் சட்டமன்றப் பேரவைச் செயலக அலுவலகம் இருக்க வேண்டும், எந்தெந்த இடங்களில் சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கு அறைகள் ஒதுக்க வேண்டும் என்பது குறித்து, உங்களுடைய உசிதப்படி, இட வசதிக்கேற்ப, அவ்வப்போது நீங்கள் முடிவு செய்கிறீர்கள். அதேபோன்று எந்தெந்தக் கட்சித் தலைவர்களுக்கு அறைகள் ஒதுக்கவேண்டும் என்பதும் உங்களுடைய ஏகோபித்த முடிவாகும்.*

குறிப்பாக, பேரவைத் தலைவராகிய நீங்கள், சட்டமன்றத்தில் உள்ள பெரும்பாலான சட்டமன்ற எதிர்க்கட்சிகளுக்கு அறைகளை ஒதுக்கியுள்ளீர்கள். இந்நிலையில், இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தங்களிடம் நேரில் எத்தனையோ முறை சந்தித்து அக்கட்சி ஒரு தேசியக் கட்சியாக இருப்பதாலும், முந்தைய சட்டமன்றத்தில் அவர்களுக்கு அறை ஒதுக்கப்பட்டிருந்த காரணத்தினாலும், ஏற்கெனவே அறை ஒதுக்கப்பட்டுள்ள கட்சிகளுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட தங்களது கட்சிக்கு அறை ஒதுக்க வேண்டுமெனவும் முன்வைத்த வேண்டுகோள்களையும், பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் அளித்த எழுத்துமூலமான கோரிக்கையினையும் கருத்தில் கொண்டு, அவர்களது கோரிக்கையைத் தீர ஆராய்ந்து அவர்களுக்கென இட வசதியை ஏற்படுத்தி, அவர்களுக்கு ஓர் அறையைத் தற்போது ஒதுக்கியுள்ளீர்கள். இதுபோன்று சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கு அறை ஒதுக்குவது அல்லது ஏற்கெனவே ஒரு கட்சிக்கு ஒதுக்கப்பட்ட அறையில் மாற்றம் செய்வது அல்லது

ஏற்கெனவே இருக்கிற அறைக்குப் பதிலாக வேறு அறை ஒதுக்குவது ஆகிய அனைத்துமே உங்களுடைய அதிகார வரம்புக்குட்பட்ட நடவடிக்கைகளாகும். தங்களது இந்த நடவடிக்கைகளில் தலையிட, எவருக்கும், ஏன், அமைச்சர்களுக்குக்கூட உரிமை இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–10

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பது, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பது நீங்கள்தான். அந்த வகையில் பேரவைத் தலைவரால் ஒதுக்கப்பட்ட சில அறைகளில் மாற்றம் செய்வது, பின்னர் ஒரு சில சட்டமன்றக் கட்சிகளின் கோரிக்கையின் அடிப்படையில், அக்கட்சிகளின் தலைவர்களுக்கு அறை ஒதுக்குவது என்பது முழுக்க முழுக்க உங்களது அதிகார வரம்பிற்குட்பட்ட செயலாகும். இதற்குத் தாங்கள் எந்தவித காரண காரியங்களையும் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. தங்களுடைய செய்கையை யாரும் விமர்சிப்பதும், கேள்வி கேட்பதும் மரபல்ல.

தாங்கள் ஜனநாயக முறைப்படி இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு, அக்கட்சி உறுப்பினர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் முகமாக ஓர் அறையை ஒதுக்கித் தந்தீர்கள். அந்தப் பணிகள் 16–4–2012–க்கு முன்பாக முடிக்கப்பட்டதாக நான் அறிகிறேன். எதிர்க்கட்சித் தலைவருடைய அறை குறுகலாகிவிட்டது என தே.மு.தி.க. உறுப்பினர்கள் எவரும் 16–4–2012 அன்று அவையில் எந்த ஒரு பிரச்சினையையும் எழுப்பவில்லை. அன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அவைக்கு வந்திருந்தார்கள். அன்றையதினம் தே.மு.தி.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் முழுமையாகக் கலந்துகொண்டார்கள். ஆனால், அன்றையதினம் இப்பிரச்சினையை எழுப்புவதை விடுத்து, பின்னர் யாரோ சிலரின் தூண்டுதலுக்கு ஆட்பட்டு, அடுத்த நாள், அதாவது, நேற்று 17–4–2012 அன்று தே.மு.தி.க.–வின் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் இதுபற்றிய பிரச்சினையை அவையில் எழுப்ப முனைந்தார். அப்போது தாங்கள் மிக நீண்டதொரு விளக்கத்தினை அவைக்கு அளித்தீர்கள். இப்பிரச்சினையைத் தவறாகச் சித்தரித்து, பேரவை விதிகளுக்கு மாறாக தங்களுடைய நடவடிக்கையை அவையிலோ, வெளியிலோ விமர்சிக்க வேண்டாம் என்று

2012 ஏப்ரல் 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

திரும்பத் திரும்பத் தாங்கள் கேட்டுக்கொண்ட பிறகும், தங்களுடைய நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், ஒரு சில வார்த்தைகளை உள்ளடக்கி ஏற்கெனவே திட்டமிட்டு, தயாரித்து கையில் எடுத்து வந்த கடிதத்தினைத் தங்களிடம் கொடுத்துள்ளார்கள்.

தாங்களும், பேரவை முன்னவராகிய நானும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சிலரும், பேரவைத் தலைவரின் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு விஷயத்தில் அவர் எடுத்துள்ள முடிவிற்கு உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம் என்று திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்ட பிறகும், எதிர்க்கட்சிக் கொறடா அவர்களும், மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர்களும் வேண்டுமென்றே, அவையின் நடவடிக்கைகளைத் தடுக்கும் முகமாக, பேச அனுமதி அளிக்கப்படாதபோதும், எழுந்து நின்றுகொண்டு, உங்களது முடிவிற்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், தேவையற்ற ஒரு சில வார்த்தைகளைப் பேசிவிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும், எனக்கும் முகவரியிட்டு மூன்று கடிதங்களைக் கொடுத்துவிட்டு அவையிலிருந்து வெளியேறினர்.

எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடிதத்தில் தங்களின் நடவடிக்கை பற்றிக் குறிப்பிட்டு "முழுக்க, முழுக்க அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே இச்செயல் செய்யப்பட்டதாக வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது" என்று தெரிவித்துள்ள வாசகம், மாண்புமிகு பேரவைத் தலைவரின் நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் அமைந்துள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் என்பவர், இந்த அவையினுடைய மற்றும் அவை உறுப்பினர்கள் அனைவருடைய உரிமையைப் பாதுகாக்கும் ஒரு பெரும் பொறுப்பில் உள்ளார். அவரது நடவடிக்கைக்கே உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், பிரதான எதிர்க்கட்சியின் கொறடா கருத்து தெரிவித்திருப்பது, தங்களின் நடவடிக்கைக்கு மாசு கற்பிக்கும் வகையில் உள்நோக்கம் கொண்டதாக அமைந்துள்ளது.

இதுமட்டுமின்றி, தே.மு.தி.க. உறுப்பினர்கள் இக்கடிதங்களைக் கொடுத்துவிட்டு, வேண்டுமென்றே அவையிலிருந்து வெளியேறி, வெளியே சென்று பத்திரிகைகளுக்குப் பேட்டி அளிக்கையில், இந்த நிகழ்வு சிறுபிள்ளைத்தனமாகவும், கேவலமாகவும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகச் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுடைய தலைவரைச் சிறுமைப்படுத்த வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின்பேரிலே

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 ஏப்ரல் 18

இது நடைபெற்றுள்ளதாகவும், உண்மைக்கு மாறான கருத்தைப் பத்திரிகைகளுக்கும், ஊடகங்களுக்கும் தெரிவித்துள்ளனர். முழுக்க முழுக்க பேரவைத் தலைவரின் ஆளுகைக்குட்பட்ட ஒரு நடவடிக்கையில் தேவையின்றி, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைத் தொடர்புபடுத்திப் பேட்டியளித்துள்ளது விஷமத்தனமானது; மிகுந்த கண்டனத்திற்குரியது. அத்தோடு நில்லாமல், "பேரவையில் தலைவருடைய முடிவைப்பற்றி குறை கூறிப் பேசினால் அவை உரிமை மீறல் என்கிறார்கள். அப்படி உரிமை மீறல் வந்தாலும் அதைச் சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்றும் பேரவை வளாக வாயிலிலேயே பேட்டியளித்துள்ளனர்.

முற்பகல் 11–15

உண்மையிலே, 16–4–2012–க்கு முன்னரே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு அறை ஒதுக்கீடு செய்ததையொட்டி, எதிர்க்கட்சித் தலைவரின் அறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுவிட்டன எனக் கருதுகிறேன். தே.மு.தி.க. உறுப்பினர்கள் அன்றைக்கு இதுகுறித்து அவையில் எழுப்பியிருக்கலாம். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அன்றைக்கு அவைக்கு வந்திருந்தார்கள். ஆனால், அதை விடுத்து, 17–4–2012 அன்று இப்பிரச்சினையை எழுப்பி, வேண்டுமென்றே அவையில் குழப்பம் விளைவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடனும், இப்பிரச்சினை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டுமென்ற எண்ணத்திலும், முன்கூட்டியே திட்டமிட்டு கடிதங்களைத் தயார் செய்து கொண்டுவந்து, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் செய்துவிட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையிலுள்ள வாசகம் அடங்கிய கடிதங்களைக் கொடுத்துவிட்டு, இதை அரசியல் ஆக்க வேண்டும், பத்திரிகைகள் முன்னால் மலிவான அரசியல் விளம்பரத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன், நான் ஏற்கெனவே சொன்னவாறு, வெளியில் சென்று பேரவைத் தலைவரின் நடவடிக்கையை விமர்சித்து, உண்மைக்கு மாறான தகவல்களைத் தெரிவித்து பேட்டி அளித்துள்ளனர். உரிமை மீறல் பிரச்சினை வந்தாலும், அதைச் சந்திக்கத் தயார் என்றும் சவால் விட்டுள்ளனர். எனவே, வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்த செயலாகத்தான் இதைக் கருத வேண்டியிருக்கிறது.

2012 ஏப்ரல் 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சென்ற ஆட்சிக்காலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, சட்டமன்றப் பேரவையில் நாங்கள் 61 உறுப்பினர்கள் இருந்தபோதும்கூட, எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த இதே அறைதான் எங்களது இயக்கத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கு மாறாக, இந்தப் பேரவையில் தே.மு.தி.க. உறுப்பினர்கள் 29 பேர்தான் இருக்கிறார்கள். இப்போதும்கூட எதிர்க்கட்சித் தலைவருக்கு உள்ள அறை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் முழுவதுமாகக் குறைக்கப்படவில்லை. இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சிக்கு இடம் கொடுப்பதற்காக ஒருசில அடிகள் மட்டுமே மாற்றம் செய்யப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர் அறையில் இருந்த அனைத்து வசதிகளும் அப்படியே உள்ளன. எனவே, எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்பட்ட அறை பறிக்கப்பட்டதாக தே.மு.தி.க. உறுப்பினர்கள் பொறுப்பற்ற முறையிலும், உண்மைக்குப் புறம்பாகவும் பேட்டி அளித்திருப்பதையும், பேரவைத் தலைவரின் நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வாசகத்தைக் கொண்ட கடிதம் அளித்திருப்பதையும், அவை உரிமையை மீறிய செயலாகவே கருத வேண்டியுள்ளது. எனவே, இப்பிரச்சினை குறித்து தீர ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக இதனை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக பேரவை விதி 226–ன்கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடு)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினை அனுப்பப்பட்டுவிட்டது. உரிமைக் குழுவில் உங்கள் கட்சியின் உறுப்பினர்களும் இருக்கிறார்கள். உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் அங்கு சொல்லலாம். (குறுக்கீடு) என்னுடைய தீர்ப்பின்மீது மேற்கொண்டு விவாதம் இல்லை. குழுக்களின்

அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) இல்லை, தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் தன்னுடைய கருத்துகளைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். எந்த வகையிலே இது அவை உரிமை மீறலுக்குள்ளான ஒரு செயல், எவ்வாறு prima facie, இதில் உரிமை மீறல் இருக்கிறதென்ற அடிப்படையிலே அவர் சொன்ன அந்தக் கருத்தையொட்டி நான் உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறேன். உரிமைக் குழுவில் ஒரு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் மட்டும் இடம் பெறவில்லை; எல்லா கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்கள் உரிமைக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். உங்களுடைய கருத்துகளை அங்கு சொல்லுங்கள். (குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள். I am not allowing. (குறுக்கீடு) ஒரு நிமிடம் பொறுங்கள். செல்வி கே. பாலபாரதி, தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இதுசம்பந்தமாக மேற்கொண்டு விவாதம் தேவையில்லை. இதுசம்பந்தமாக எந்தக் கருத்து இருந்தாலும், உங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் உரிமைக் குழுவில் இருக்கிறார்களல்லவா? அங்கு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். உரிமைக் குழு என்பது ஒரு Independent Committee. அந்தக் குழுவிற்கு நான் அனுப்பியிருக்கிறேன். அந்தக் குழுதான் இது குறித்து முடிவு செய்யும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) அவை முன்னவர் பேசட்டும், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பிய பொருள்பற்றித் திரும்பவும் இந்த அவையில் பேசுவதற்கு விதிகளில் இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இங்கு ஒரு தீர்ப்பை அளித்த பிறகு, அந்தத் தீர்ப்பு குறித்து கருத்தோ, எந்த ஒரு விமர்சனமோ கூடாது என்பது காலங்காலமாகக் கடைப்பிடித்து வருகின்ற ஒரு மரபு. அந்த மரபைத்தான் நானும் கடைப்பிடிக்கின்றேன். எனவே, இதுகுறித்து எந்த விவாதமும் தேவையில்லை.

குழுக்களின் அறிக்கை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

2012 ஏப்ரல் 18]

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of personal explanation.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, குழுவின் அறிக்கைகள் அளிப்பதற்காக நான் அழைத்திருக்கிறேன். நீங்கள் அந்த சப்ஜெக்ட்டுக்குள்ளே போங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் தீர்ப்பு வழங்கவில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நான் தீர்ப்பு வழங்கிவிட்டேன்.

திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை, இன்னும் தீர்ப்பு வழங்கவில்லை. On a point of personal explanation, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் நான் அன்றைக்கு அவையில் இருந்ததாகச் சொல்கிறார்கள்.

முற்பகல் 11—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே பாருங்கள், அதற்கு நான் ஒரு explanation கொடுக்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இதில் prima facie, உரிமை மீறல் இருக்கிறது என்று justify செய்து, இந்த அவைக்குத் தெரிவித்த காரணத்தின் அடிப்படையிலே, நான், இதில் prima facie, உரிமை மீறல் இருக்கிறது என்பதால் அவை உரிமைக் குழுவிற்கு refer பண்ணியிருக்கிறேன். Referring is also a ruling and it is not merely an opinion. என்னுடைய தீர்ப்பை நீங்கள் விமர்சனம் செய்யக்கூடாது; எந்தக் கருத்தும் சொல்லக்கூடாது. இது காலங்காலமாக அனுசரிக்கப்பட்டுவரும் மரபு, அது உங்களுக்கே தெரியும். (குறுக்கீடு) குழுக்களின் அறிக்கையை அளியுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, prima facie உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்றுகூட எங்களைக் கேட்கவேண்டாமா? ஏனென்றால், ஒரு பிரச்சினை அவையின்முன் வருகிறபோது மேலெழுந்தவாரியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் உட்காருங்கள். ஒரே ஒரு clarification-னை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். அதனால்தான்

[பேரவைத் தலைவர்] [2012 ஏப்ரல் 18

நான், "மேலெழுந்தவாரியாகப் பார்க்கின்றபோது" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறேன். நான் என்னுடைய findings–ல் இதில் prima facie உரிமை மீறல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். So, this matter has been referred to the Privileges Committee. Privileges Committee is not a single party Committee. எல்லாக் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்ததுதான் அவை உரிமைக் குழு. நீங்கள் அங்கேபோய் உங்கள் கருத்தைச் சொல்லலாம். அந்த கமிட்டிதான் பேரவைக்கு அறிக்கையை அளிக்கும். அவை உரிமைக் குழுவில் ஒரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மட்டும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைப்பது என்பது என்னுடைய உரிமை, அதை நீங்கள் கேள்வி கேட்கக்கூடாது. பேரவைத் தலைவருக்கென்று வரையறுக்கப்பட்ட அந்த அதிகாரத்தின்படிதான் என்னுடைய கடமையை நான் செய்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அனைத்தையும் நன்றாக அறிந்தவர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு பொருள் குறித்து, "அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது" என்று சொன்னதற்குப் பின்னர், அதன்பேரில் கருத்துகளைச் சொல்வதற்கு இங்கே யாருக்கும் அதிகாரம் கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 'நீங்கள் கருத்தைச் சொல்லுங்கள்', 'நீங்கள் கருத்தைச் சொல்லுங்கள்', 'நீங்கள் கருத்தைச் சொல்லுங்கள்' என்று எல்லோரையும் கேட்கமுடியாது. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், 'எங்களுடைய கருத்துகளையும் கேட்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுபோன்ற நடைமுறை இல்லை. விதிகளில் அதற்கு இடமுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நீங்கள் நிறைந்த அனுபவம் உள்ளவர்; அவையின் மரபு தெரியும்; பேரவைத் தலைவரின் அதிகாரம் தெரியும்; அந்த அதிகாரத்திற்குட்பட்டுதான் இந்தப் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு நான் அனுப்பியிருக்கிறேன். தயவுசெய்து அதற்குள்ளே போகவேண்டாம்.